# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1698/20 - 2011 මාර්තු 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.03.24

*1698/20 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

#### கிழக்கு மாகாண மாகாணசபை

**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்வி நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் கிழக்கு மாகாண சபையால் 2010.02.09 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, 2010.05.04 ஆந் திகதி கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட நியதிச்சட்டத்தை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இத்தால் வெளியிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,<br>
முதலமைச்சரும் மாகாண நிதி மற்றும் திட்டமிடல்,<br>
உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்,<br>
கிராம அபிவிருத்தி, மனித வலு, சட்டமும் ஒழுங்கும்,<br>
பிராந்திய நிர்வாகம், சுற்றுலாத்துறை, சுற்றாடல் அமைச்சரும்<br>
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் செயலகம்,<br>
கிழக்கு மாகாணம்,<br>
உட்துறைமுக வீதி,<br>
திருகோணமலை.<br>
2011,மாச்சு 23.

**கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாலர் பாடசாலைக் கல்வி நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் பயனாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கிணங்க, கிழக்கு மாகாண எல்லைக்குள் ஏற்கெனவே தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும், மற்றும் புதிதாகத் தாபிக்கப்படும் பாலர் பாடசாலைகளைக் கண்காணிக்கும், நிர்வகிக்கும், ஒருங்கிணைக்கும் மற்றும் வழிநடத்தும் காரியங்களுக்காக பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம் ஒன்றைத் தாபித்தல், பாடசாலைகளைப் பதிவுசெய்தல், ஆசிரியர் ஆசிரியைகளைப் பதிவு செய்தல், மாகாண பாலர் பாடசாலைக் கல்வி ஆலோசனைக்குழுவினைத் தாபித்தல், மற்றும் பாலர் பாடசாலைக் கல்விக் கொள்கைத்திட்டம் தயாரிப்பது தொடர்பான கொள்கைத் திட்டக்குழுவினைத் தாபித்தல், ஆகியன தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அவற்றிற்கு இடைநேர் விளைவான எற்பாடுகளைச் செய்வதற்குமான ஒரு நியதிச்சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிழக்கு மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தினமும். நோக்கங்கள்.*

1. இந் நியதிச்சட்டம் ''2010ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியக நியதிச்சட்டம்'' என அழைக்கப்படுவதுடன் கிழக்கு மாகாண ஆளுநரால் சம்மதமளிக்கப்படும் அத்தகைய தினத்தில் இருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி I

#### நோக்கம்

2. (1)(அ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளின் தேவைப்படுத்தலுக்கமைய கீழ்வருவன இதன் நோக்கங்களாக அமைதல் வேண்டும்:-

(i) மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம் ஒன்றைத் தாபித்தல்;

(ii) பாலர் பாடசாலைக் கல்வி தொடர்பான மாகாண ஆலோசனைக் குழுவினைத் தாபித்தல்;

(iii) மாகாண பாலர் பாடசாலைக் கல்வி தொடர்பான கொள்கைத்திட்டம் தயாரிக்கும் நோக்கத்திற்காக குழுவொன்றைத் தாபித்தல்

(iv) மாகாணத்தில் செயற்படும் பாலர் பாடசாலைகளைப் பதிவு செய்தல், கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடாத்துதல்.

பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் நோக்கம்.

(ஆ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகளின் நோக்கங்களாக கீழ்வருவன அமைதல் வேண்டும் :-

(i) பிள்ளைப்பருவத்தின் வளர்ச்சியையும் உரிய வழிகாட்டலையும் வழங்குதல்

(ii) புலன்கள் மூலமாக அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வளமானதும் பாதுகாப் பானதுமான சூழலை ஏற்படுத்தல்

(iii) நாளாந்த செயற்பாடுகளின் ஊடாக நல்ல பழக்க வழக்கங்களைப் பெற்றுக் கொடுத்தல்

(iv) சிநேகபூர்வமான உரையாடல், அன்பு மற்றும் தொடர்பாடலுக்கு தம்மைப் பழக்கப் படுத்திக் கொள்வதற்குப் பயிற்சி வழங்குதல்

(v) நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்வதற்கு வழிகாட்டுதலும் அதற்கான சாத்தியமான சூழலைப் பாடசாலைப் பிரதேசத்தில் ஏற்படுத்திக் கொடுத்தலும்;

(vi) நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு உகந்த சூழலை உருவாக்கிக் கொடுத்தல்

(vii) உடல் வளர்ச்சி மற்றும் தேகாரோக்கிய விருத்திக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்

(viii) பிள்ளைகளின் சுய ஆற்றலை அடையாளங் கண்டு அவைகளை அறிவாற்றலுடன்கூடிய படைப்புத் திறன்களாக விருத்தி செய்தலும் அதற்கான உகந்த சூழலை உருவாக்கிக் கொடுத்தலும்

(ix) சுற்றுச்சூழலை நேசிப்பதற்கும் அதன்மூலம் மனநிறைவு அடைந்து மகிழ்ச்சியடை வதற்குப் பயிற்றுவித்தலும் மற்றும் சூழலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைப் பாதுகாப்பதற்கு வழிகாட்டுதலும்

(x) சவால்களுக்கு முகம்கொடுக்கும் உடல், உளத் திறமைகளை விருத்தி செய்யப் பயிற்றுவித்தல்

(ஒ) சமுதாயத்துடன் ஒத்துழைத்து காரியங்களை ஆற்றுவதற்குப் பழக்கப்படக்கூடிய சிறந்த சூழலை உருவாக்குதல்

(xii) பிள்ளைகளின் பாலர் பருவத்தை இன்பமாகவும், மகிழ்ச்சியாகவும் களிப்பதற்கு இடமளித்தல்

(xiii) பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி விருத்திக்காக சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தல்

(xiv) பிரதேச மக்களின் மொழி, கலை, கலாசார பெறுமானங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்து வத்தை பிள்ளைகள் மத்தியில் உணர்த்தி தேசிய மற்றும் இன உறவு மனப்பான்மையை வளர்த்தல்

(xv) தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றுடன் பிள்ளைகளுக்கு சிநேக உணர்வை ஏற்படுத்தல்.

## பகுதி II

### நிர்வாகமும் கண்காணிப்பும்

3. (1) கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்வி பணியகம் (இதனகத்துப் பின்னர் பணியகம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்று தாபிக்கப்படல் வேண்டும். பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தைத் தாபித்தல்

(2) உட்பிரிவு (1) இனால் பெயர் குறித்தொதுக்கப்பட்ட பணியகமானது, கூட்டிணைக்கப்பட்ட ஒரு யாக்கமாகவும் இடையறாப் பின்னுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத் தொடரவோ அல்லது வழக்குக்கு உட்படவோ கூடியதாகலாம்.

4. (1) நிருவாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு ஆகியன இதனகத்துப் பின்னர் ஏற்படுத்தப் பட்டவாறு அமைக்கப்பட்ட முகாமைத்துவ வாரியம் ஒன்றிற்கு உடமையாக்கப்படல் வேண்டும். பணியகத்தின் முகாமைத்துவம்.

(2) பணியகத்தின் முகாமைத்துவ வாரியமானது (இதனகத்துப் பின்னர் "வாரியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கீழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி

(ஆ) கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பிரதிநிதி

(இ) கிழக்கு மாகாணத் திறைசேரியின் பிரதிநிதி

(ஈ) உட்பிரிவுகள் (3) இனதும் (4) இனதும் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டும் வேறு நால்வர்.

(3) (அ) உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) இன் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் நியமனத்தை அமைச்சர் தனது பூரண தற்றுணிபில் ஒழித்து விடலாம்.

(ஆ) உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) கீழ் நியமிக்கப்பட்ட வாரிய உறுப்பினர் எவரேனும் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் எவ்வேளையிலும் வாரியத்திலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(இ) உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) இன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது பதவி விலகினால் அல்லது பதவியிலிருந்து விலக்கப்பட்டாலன்றி அவரது பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆதல் வேண்டும்.

(ஈ) உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) இன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரது பதவியில் வெற்றிடம் ஏற்படுமாயின், அவருக்குப் பதிலாக வேறொருவர் அமைச்சரால் நியமிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினரின் பதவிக்காலம் வெற்றிடத்தை ஏற்படுத்திய உறுப்பினரின் பதவிக்காலத்தின் மிகுதிக்காலமாக இருத்தல் வேண்டும்.

(4)(அ) உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) இன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை வாரியத்தின் தவிசாளராக அமைச்சர் நியமித்தல் வேண்டும் என்பதுடன், தவிசாளரே பாலர் பாடசாலைக் கல்விக்கான தகுதி வாய்ந்த அதிகாரியாதலும் வேண்டும்.

(ஆ) சுகவீனம் அல்லது இலங்கைக்கு வெளியே பயணம் மேற்கொள்வது போன்ற காரணங்களுக்காகத் தகுதி வாய்ந்த அதிகாரி தனது கடமைகளைச் செய்ய முடியாதவிடத்து, அமைச்சரானவர் உட்பிரிவு (2) இன் பந்தி (ஈ) இன் கீழ் நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினர் ஒருவரைப் பதில் தவிசாளராக நியமித்தல் வேண்டும் என்பதுடன், அப்பதில் தவிசாளர் பதில் தகுதிவாய்ந்த அதிகாரியாதலும் வேண்டும்.

(5) வாரியத்தின் ஏதேனும் கூட்டத்திற்கான நிறைவெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) வாரியமானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுவது தொடர்பாகவும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையை விதிகள் மூலம் ஒழுங்குபடுத்தலாம்.

(7) வாரியத்தின் செயல்கள் எதுவும் அல்லது அதன் நடவடிக்கை எதுவும் உறுப்பினர்கள் மத்தியில் ஒரு வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்பட மாட்டாது.

(8) அமைச்சர் வாரியத்தின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய ஊதியத்தினை பணியகத்தின் நிதியத்திலிருந்து பிரிவு 4 இன் உட்பிரிவு (2)(ஈ) யின் கீழ் அமைச்சரினால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களுக்குக் கொடுப்பனவு செய்யலாம்.

பணியகத்தின் தத்துவங்கள்.

5. பணியகத்தின் பெயரால், வாரியம் கீழ்க்காணும் தத்துவங்களை உடையதாய் இருத்தல் வேண்டும்:-

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ள அல்லது கொண்டிருக்க அல்லது முகாமை செய்ய ;

(ஆ) பணியகத்திற்கு உரித்தாகக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்க, ஈடுவைக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையளிக்க அல்லது கையாள்,

(இ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுத்துவதற்கு அவசியமான அத்தகைய செயல்களையும் காரியங்களையும் புரிவதற்கு.

பணியகக் கணக்கு.

6. அரசுக்குப் பகுதியில் அல்லது முழுமையில் சொந்தமான ஏதேனும் வங்கியில் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகக் கணக்கொன்றை வாரியம் பராமரித்தல் வேண்டும் என்பதுடன், மானியக் கொடை அல்லது நன்கொடை வழியாக அல்லது சிறுவர் கல்வி அபிவிருத்தியினைத் தனது குறிக்கோள்களுள் ஒன்றாகக் கொண்ட ஏதேனும் தாபனத்திலிருந்தாயினுஞ்சரி சேரக்கூடிய, எல்லாப்பணமும் அத்தகைய கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

பணியகத்தின் பணம் பிரயோகிக்கக் கூடிய நோக்கங்கள்.

7. அமைச்சரின் பணிப்பிற்கமைய பணியகத்திற்கு உரிய பணத்தை, பணியகத்தின் நோக்கங்களுக்காகப் பிரயோகித்தல் வாரியத்தின் கடமையாதல் வேண்டும்.

பணியகத்தின் அலுவலர்களும், ஊழியர்களும்.

8. அமைச்சரின் பணிப்புக்கமைய பின்வருவனவற்றிற்காக வாரியம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணியகத்தின் விவகாரங்களை நிருவகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் அவசியமாகக் கூடிய அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமிப்பதற்கு;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான வேதனம் பற்றி முடிவு செய்வதற்கு;

(இ) அத்தகைய வேதனத்தையும் பணியகத்தின் விவகாரங்களை நிருவகிப்பதில் உறப்படும் செலவுகளையும் பணியகத்தின் வருமானத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு;

கணக்காய்வும் கணக்குகளும்.

9. (1) பணியகத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பரிப்புகள் என்பவற்றுடன், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருப்பதற்காக வாரியம் ஆவன செய்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் கணக்குகள் அரசியல் யாப்பின் 154 ஆம் உறுப்புரைக்கமையவும் கிழக்கு மாகாண சபை யின் விதிகளுக்கமையவும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையை மாகாண சபையின் முன்னிலையில் இடுதல்.

10. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையை அமைச்சர் மாகாண சபையின் முன்னிலையில் இடுதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்காக வாரியத்தின் தத்துவம்.

11. வாரியத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தல், செயலாற்றுதல், புரிதல் என்பனவற்றைப் பாதிக்கும் அல்லது அதனோடு தொடர்புடையது அல்லது அதற்கு இடைநேர் விளைவானதெனும் ஏதேனும் கருமம் தொடர்பாக வாரியமானது அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

பணியகத்தின் அலுவலர்களும், ஊழியர்களும், குற்றவியல் சட்டக் கோவையினதும், இலஞ்சச் சட்டத்தினதும், கருத்துக்கு அமைய பகிரங்க சேவையாளர் எனக் கருதல்.

12. பணியகத்தின் எல்லா முகாமைத்துவ வாரிய உறுப்பினர்களும் அலுவலர்களும், ஊழியர்களும் குற்றவியல் சட்டக் கோவையினதும் இலஞ்சச் சட்டத்தினதும் கருத்துக்கு அமையவும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

## பகுதி III

### ஆலோசனைக் குழுவைத் தாபித்தல்

13. (1) (இதனகத்துப்பின்னர் "ஆலோசனைக்குழு" எனக் குறிப்பிடப்படும்) பாலர் பாடசாலைக் கல்வி ஆலோசனைக் குழுவொன்று அமைச்சரால் தாபிக்கப்படல் வேண்டும். ஆலோசனைக் குழுவைத் தாபித்தல்.

(2) ஆலோசனைக்குழு மொத்தம் 11 உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கும் என்பதுடன் அவர்களுள் 6 பேர் பதவிவழி உறுப்பினர்களாகவும், 5 பேர் நியமன உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(3) (அ) கீழே குறிப்பிடப்படும் அறுவர் தமது பதவிகளின் அடிப்படையில் பதவிவழி உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்:- பதவிவழி உறுப்பினர்கள்.

(i) கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்;
(ii) கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்;
(iii) கிழக்கு மாகாண விளையாட்டுகள் பணிப்பாளர்;
(iv) கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்;
(v) கிழக்கு மாகாண சிறுவர் நன் நடத்தை ஆணையாளர்;
(vi) கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்.

(ஆ) கீழே குறிப்பிடப்படும் ஐவரை அமைச்சர் நியமன உறுப்பினர்களாக நியமித்தல் வேண்டும்:- நியமன உறுப்பினர்கள்.

(i) பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் கல்வி தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயற்பாட்டி லிருக்கும் தொண்டர் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று மாவட்டங்களில் இருந்து தலா ஒருவர்;
(ii) மாகாணமட்டத்தில் பாலர் பாடசாலைக் கல்வி முறை தொடர்பாகவும் பிள்ளைப்பராய செயற்பாடுகள் தொடர்பாகவும் அறிவு முதுமைபெற்ற கல்விமான் ஒருவர்;
(iii) சிறுவர் விசேட வைத்திய நிபுணர் ஒருவர் அல்லது உள நலவியல் விசேட வைத்திய நிபுணர் ஒருவர்.

14. (1) ஆலோசனைக் குழுத் தலைவராக பாலர் பாடசாலைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் செயற்படுவதுடன், அக் குழுவின் செயலாளராக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செயற்படுதல் வேண்டும். ஆலோசனைக்குழுத் தலைவர், செயலாளர் மற்றும் செயற்பாடுகள்.

(2) ஆலோசனைக் குழுக்கூட்டம் ஒன்றிற்கான நிறைவெண் மொத்த உறுப்பினர்களில் ஐவர் ஆதல் வேண்டும்.

(3) நியமன உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது முன்கூட்டியே பதவி விலகினால் அல்லது அவர் பதவியில் இருந்து விலக்கப்பட்டாலன்றி, அவரது பதவிக்காலம் 3 வருடங்களாக இருத்தல் வேண்டும்.

(4) நியமன உறுப்பினர் ஒருவர் ஆலோசனைக் குழுக் கூட்டமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஏதேனுமொரு கூட்டத்திற்கு, முன் அறிவித்தலின்றி தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காது போனால் அவர் தானாகவே தனது உறுப்பினர் பதவியை விட்டு விலகியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சர் எந்தவொரு காலகட்டத்திலும் ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கும் உறுப்பினர் ஒருவரைப் பதவிலிருந்து விலக்கலாம்.

(6) நியமன உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு எழுத்துமூல அறிவித்தல் ஒன்றை விடுத்து தனது நியமன உறுப்பினர் பதவியில் இருந்து தானாக விலகிக் கொள்ளலாம்.

(7) நியமன உறுப்பினர் ஒருவர் இறப்பதனால் அல்லது பதவி விலகுவதனால் அல்லது விலக்கப்படு வதனால் அல்லது வேறு ஒரு காரணத்திற்காக பதவியொன்று வெற்றிடமாக்கப்படுமிடத்து குறித்த வெற்றிடத்துக்கு பொருத்தமான வேறொரு ஆளை அமைச்சர் பிரிவு 4(3)(ஆ) விற்கு அமைய நியமிக்கலாம்:ஆயினும், அப்பதவி இழந்த உறுப்பினருக்குப் பதிலாக நியமிக்கப்படும் அத்தகைய உறுப்பினர் வெற்றிடமாக்கப்பட்ட அவ்வுறுப்பினரின் மிகுதிக் காலத்திற்கு மாத்திரமே பதவி வகித்தல் வேண்டும்.

(8) பிரிவு 13 இன் உட்பிரிவு (3)(ஆ) இன் கீழ் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் ஒவ்வொரு வருக்கும் அமைச்சர் வாரியத்தின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய ஊதியத்தினை பணியகத்தின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யலாம்.

கூட்ட நடைமுறை விதிக்கோவை

(9) இந்நியதிச்சட்டம் வேறு வகையாக ஏற்பாடு செய்திருந்தாலன்றி ஆலோசனைக் குழுவானது தனது செயற்பாடுகள் மற்றும் கூட்ட நடைமுறைகள் தொடர்பாக நடைமுறை விதிக்கோவை ஒன்றை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(10) ஆலோசனைக் குழு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவையாயினும் கூடுதல் வேண்டும்.

ஆலோசனைக் குழுவில் நியமிப்பதற்கு தகுதியற்றவர்கள் பற்றி

15. எவரேனும் ஒருவர்,

(1) (அ) இலங்கைப் பிரஜையாக இல்லாதவிடத்து அல்லது பிரஜாவுரிமை இழக்குமிடத்து, அல்லது

(ஆ) இலங்கையிலோ அல்லது வேறு ஒரு நாட்டில் நடைமுறையில் இருக்கும் ஏதாவதொரு சட்டத்தினாலோ புத்தி சுவாதீனமற்றவர் என அல்லது கடன் தீர்க்க வகையற்றவர் என பிரகடனப்படுத்தப் பட்டிருந்தால், அல்லது

(இ) இலங்கையில் அல்லது பிறிதொரு நாட்டு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், அல்லது

(ஈ) ஆலோசனைக்குழுவின் உறுப்பினராக இருந்து காரியங்களை நிறைவேற்றுவதில் உறுப்பினரின் நிதி ரீதியான அல்லது வேறு வகையான தொடர்பு அல்லது செயற்பாடு பாதிப்பை ஏற்படுத்துமளவுக்குச் செல்வாக்குச் செலுத்தும் என கருதப்படுமிடத்து, அல்லது

(உ) இந்நியதிச் சட்ட ஏற்பாடுகள் ஏதாவதொன்று தொடர்பில் குற்றமிழைத்தவராகக் காணப் பட்டால், ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.

16. ஆலோசனைக் குழுவில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் ஏற்படும் குறைபாடு எதுவும், ஆலோசனைக்குழுத் தீர்மானம் எதனையும் அல்லது செயற்பாடுகள் எவற்றையும் இரத்துச் செய்யக் கூடியதாக இருத்தல் ஆகாது.

ஆலோசனைக் குழுவின் பணிகளும் பொறுப்புக்களும்

17. ஆலோசனைக் குழு கீழ்க்காட்டப்படும் பணிகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றக் கடமைப்பட்ட தாதல் வேண்டும்:-

(அ) பாலர் பாடசாலைகள் தொடர்பான கொள்கை அளவிலான தீர்மானங்களில் மாற்றங்கள், திருத்தங்கள் அல்லது புதிய அறிமுகங்கள் மேற்கொள்வதும் அவற்றைச் செயலுருப்படுத்துவது தொடர்பான செயல் திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றை அமைச்சரின் கவனத்திற்குச் சமர்ப்பித்தலும் ;

(ஆ) பாலர் பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படுத்தப்படவேண்டிய கருமங்களைத் தெரிந்தெடுத்தலும், அவை தொடர்பான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தலும், ஆலோசனை வழங்குதலும், மீளாய்வு செய்தலும், மேற்பார்வை செய்தலும்;

(இ) மாகாண சபை எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கான விடயங்கள் தொடர்பான பாடத்திட்டத்தைத் தீர்மானித்தல், மீளாய்வு செய்தல், மாற்றியமைத்தல் அல்லது அவை சம்பந்தமான வேறு கொள்கையளவிலான தீர்மானங்களை மேற்கொள்ளுதல்;

(ஈ) விசேட கல்வித் தேவைகளுள்ள பிள்ளைகள் விடயத்தில் அவர்களுக்கு ஏற்ற கல்விச்செயல் திட்டங்களைத் தயாரித்தலும் அவர்களின் அறிவுத்திறன் வளர்ச்சிக்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளுதலும்;

(உ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு மாறாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாலர் பாடசாலைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானித்தல்;

(ஊ) பாலர் பாடசாலைகளைப் பதிவு செய்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பாக ஆராய்ந்து, அமைச்சருக்கு விதப்புரைகளை முன்வைத்தல்;

(எ) இந்த நியதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்

(ஏ) காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப ஆசிரியர் வழிகாட்டல்களைத் தயாரித்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்

(ஐ) காலத்திற்குக் காலம் பிள்ளைகளின் உடல் உள நல போசாக்கு விடயங்களைக் கருத்திற் கொண்டு அதனை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை ஆக்குதல்

(ஒ) பாலர் பாடசாலைகளில் வள ஒதுக்கீடு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்

(ஓ) அமைச்சரினால் முன்வைக்கப்படும் ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

*பாலர் பாடசாலைப் பாடத்திட்டம் .*

*18.* பாலர் பாடசாலைகளுக்கான பாடத் திட்டம் ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அப்பாடத்திட்டம் அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அத்தகைய தினத்திலிருந்து மாகாணத்தின் அனைத்துப் பாலர் பாடசாலைகளினதும் பாடத்திட்டமாதலும் வேண்டும்.

## பகுதி IV

### பாலர் பாடசாலைகளை ஆய்விற்குட்படுத்தல்

*பாலர் பாடசாலை தொடர்பான ஆய்வு.*

*19.* (அ) நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தில் இருந்து 3 மாத காலத்துக்குள் பணியகம், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகள் தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அதனடிப்படையில் அறிக்கையை ஆவணப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாவணம் கீழ்க் காட்டப்படும் விடயங்களை உள்ளடக்கியதாயிருத்தலும் வேண்டும்:-

(i) மாகாணமட்டத்தில் தற்பொழுது செயற்பாட்டிலுள்ள பாலர் பாடசாலை தொடர்பான பட்டியல் ;

(ii) ஒவ்வொரு பாடசாலையிலிருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை ;

(iii) ஒவ்வொரு பாடசாலை யிலிருக்கும் நிர்வாகமுறை ;

(iv) ஒவ்வொரு பாடசாலைக்குமான ஆசிரியர்களின் எண்ணிக்கை ;

(v) ஒவ்வொரு பாடசாலைக்குமான ஆளணி ;

(vi) ஒவ்வொரு பாடசாலைக்குமுரிய கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ முறை ;

(vii) ஒவ்வொரு பாடசாலையிலிருக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் ;

(viii) ஒவ்வொரு பாடசாலையினதும் அமைவிடம் மற்றும் சுற்றுச்சூழல் ;

(ix) ஒவ்வொரு பாடசாலையினதும் செயற்பாட்டிற்கான நிதி வருவாய் மூலங்கள் ;

(x) பிரதேசத்தின் மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கையில் பாலர் பாடசாலைக் கல்வி கற்கும் பிள்ளைகளின் விகிதாசாரம்.

(ஆ) பணியகம் அத்தகைய ஆவணத்தைத் தயாரிப்பதில் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவாறான அத்தகைய தரவுகள் மற்றும் தகவல்களை உள்ளீடாகக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் ஆட்கள் அத்தகைய தரவுகளை அல்லது தகவல்களை உரியவாறு தகுதி வாய்ந்த அதிகாரிக்கு வழங்குவது இத்தால் அவர்களது கடப்பாடாதல் வேண்டும்.

## பகுதி V

### கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விக் கொள்கைத்திட்டம்

மாகாண பாலர் பாடசாலைக் கல்வி கொள்கைத்திட்டமும் குழு தாபகமும்.

20. (1) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விக் கொள்கைத்திட்டம் (இதனகத்துப் பின்னர் “கொள்கைத்திட்டம்” என அழைக்கப்படும்) ஒன்று தயார்ப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2)இக்கொள்கைத்திட்டம் தயாரித்தல் தொடர்பாக அமைச்சர், மூவர் அடங்கிய குழு ஒன்றைத் தாபிப்பார். இக்குழுவின் உறுப்பினர்களாக பிள்ளைப்பருவ கல்வி முறையில் விசேட தகைமை மற்றும் நிபுணத்துவம் பெற்ற இருவர் மற்றும் விடயத்திற்குப் பொருத்தமான இன்னுமொருவர் உள்ளடக்கப்படுவர் என்பதுடன், கொள்கைத்திட்டம் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய தினத்திலிருந்து கொள்கைத்திட்டக் குழுவின் பதவிக்காலம் முடிவுறுததாதலும் வேண்டும்.

(3)கொள்கைத்திட்டக் குழுவானது நியமனத் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கீழ்க்காட்டப்படும் விடயங்களை உள்ளடக்கியதான கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விக் கொள்கைத்திட்டம் ஒன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பாலர் பாடசாலை கல்வி நியமங்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும் அவற்றை இலகுவில் அடைந்து கொள்வதிலும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற சவால்கள், மற்றும் குறைபாடுகள்

(ஆ) மாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள பிள்ளைகள், பாலர் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற இடையீடுகள், மற்றும் தடைகள்

(இ) மாகாண மட்டத்தில் செயற்படுகின்ற பாலர் பாடசாலைகளின் செயற்பாட்டுத்திறன் மற்றும் வெளிப்பாட்டுத் திறமைகளில் காணப்படுகின்ற முரண்பாடுகள் மற்றும் இடைவெளிகளை நீக்குதல் அல்லது குறைத்தல் தொடர்பான முன்மொழிவுகள்

(ஈ) ஏலவே அமையப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளங்களை அதி உச்சப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல், அமுலிலுள்ள வளப்பகிர்வு நடைமுறையில் நியாயத் தன்மையைக் கடைப்பிடித்தல் தொடர்பான முன்மொழிவுகள்

(உ) ஏலவே இருக்கின்ற ஆசிரிய வளத்தினை வினைத்திறன் மற்றும் ஆக்கத்திறன் உடையதாகக் கட்டியெழுப்புவதும் மேலதிக வளங்களை இணைத்துக் கொள்வதும்

(ஊ) இந்நியதிச்சட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதில் சம்பந்தப்பட்ட திறத்தவர்களை அடையாளம் காண்பது, ஒருங்கிணைப்பது தொடர்பான முன்மொழிவுகள்

(4) அமைச்சர் கொள்கைத் திட்டக் குழுவினால் தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த திட்டத்தினை ஆலோசனைக் குழுவிடம் முன்வைத்து அக்குழுவின் அபிப்பிராயத்தையும் சிபாரிசுகளையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(5) அமைச்சர் ஆலோசனைக்குழு முன்வைக்கும் அத்தகைய அபிப்பிராயம் மற்றும் சிபார்சுகளை தேவைக்கேற்ப கொள்கைத் திட்டத்தினுள் உள்வாங்கி அதன் பின்னர் அவற்றை அமைச்சர் வாரியத்தின் முன்வைத்தல் வேண்டும்.

(6) குறித்த கொள்கைத்திட்டமானது அமைச்சர் வாரியத்தின் தீர்மானத்தின் பேரில் அது கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விக் கொள்கைத்திட்டம் என அமைச்சரால் பிரகடனப் படுத்தப்படல் வேண்டும்.

## பகுதி V

### பாலர் பாடசாலைகளை பதிவு செய்தல்

*21.* இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் அத்தகைய தினத்திற்குப் பின்னர், மாகாணத்தினுள் எப்பாலர் பாடசாலையும் பணியகத்தில் பதிவு செய்யப்படாமல் செயற்படுதல் அல்லது தாபித்தல் கூடாது. — *பதிவு செய்யப்படாத பாலர் பாடசாலைகளை செயற்படுத்தக் கூடாது என்பது.*

*22.* இந்நியதிச்சட்டம் வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு மூன்று மாதங்கள் நிறைவுக்கு வருமுன் மாகாணத்தினுள் செயற்படும் ஒவ்வொரு பாலர் பாடசாலையும் அதன் உரிமையாளர்கள் அல்லது நிர்வாகத்தர்கள் மூலம் இந்நியதிச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் காட்டப்படும் படிவத்தில் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். — *பாலர் பாடசாலைகளைப் பதிவுசெய்தல்.*

*23.* இந் நியதிச்சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாத காலத்தினுள் அத்தகைய விண்ணபத்தைச் செய்யத் தவறும் எவரேனும் வேண்டுகோள் விடுக்குமிடத்து, தாமதமான காலங்களைக் கருத்திற் கொண்டு தகுதி வாய்ந்த அதிகாரி இரண்டாம் அட்டவணையில் விபரிக்கப்படும் மேலதிக கட்டணத்தினை அறவிட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளக் கூடுமாதல் வேண்டும். — *உரிய காலத்தில் பதிவு செய்யப்படாத பாலர் பாடசாலைகளுக்கு தாமதக் கட்டணம் அறவிடல்.*

*24.* இந்நியதிச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அத்தகைய தினத்தின் பின்னர், ஏதேனும் பாலர் பாடசாலையொன்றை எவரேனும் உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் தகுதி வாய்ந்த அதிகாரியிடம் அட்டவணை மூன்றில் காட்டப்படும் விண்ணப்பப்படிவத்தினூடாக விண்ணப்பித்துப் பதிவு செய்தல் வேண்டும். — *புதிய பாலர் பாடசாலைகளைப்பதிவு செய்தல்.*

*25.* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பணியகத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் பதிவுக் கட்டணமொன்றை பதிவுக்கான விண்ணப்பத்துடன் செலுத்துதல் வேண்டும். — *பதிவுக்கட்டணம்.*

*26.* (1) எவரேனும் உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் ஏதேனும் பாலர் பாடசாலை ஒன்றை அல்லது பலவற்றை இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கோ அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது கட்டளைகளுக்கோ முரணாக ஆரம்பித்து அல்லது செயற்படுத்தி அல்லது ஆரம்பித்துச் செயற்படுத்தி வருகின்றார் என்பது தகுதி வாய்ந்த அதிகாரிக்குத் தெரியவந்து அவர் அத்தகைய உரிமையாளர் அல்லது நிருவாகத்தருக்கு அத்தகைய தவறுகை தொடர்பாக எழுத்து மூலம் கட்டளை ஒன்றைப் பிறப்பித்து 14 நாட்கள் நிறைவு பெற்றும் குறித்த தவறுகையை நிவர்த்திக்க அத்தகைய உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றை இழைத்தவராகக் கருதப்படுவார். — *நியதிச்சசட்டத்தின் ஏற்பாட்டினை மீறுகை ஒரு குற்றம்.*

(2) ஏதேனும் பாலர் பாடசாலையின் உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் உபபிரிவு (1) இன் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட அத்தகைய தினத்திலிருந்து ஒவ்வொரு மாதமொன்றுக்கு ரூபாய் 500 ற்குக் குறையாத ஒரு தொகையைத் தண்டப்பணமாக பணியகத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

*27.* (1) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் அத்தகைய தினத்தில் ஒரு பாலர் பாடசாலை இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பணியகத்தில் பதிவு செய்யப்படுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டு அவ் விண்ணப்பம் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இல்லாதுவிடின் அது தொடர்பான காரணங்களை அறிவித்து தகுதி வாய்ந்த அதிகாரி பதிவுக்கான விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். — *பதிவினை நிராகரிக்க, பணியகத்திற்கு முடியுமென்பது.*

(2) அவ்வாறு நிராகரிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் அது நிராகரிக்கப்படுவதற்கான காரணம் விண்ணப்பித்த தினத்தில் இருந்து ஒரு மாத காலத்தினுள் விண்ணப்பதாரிக்கு தகுதி வாய்ந்த அதிகாரியால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*அமைச்சருக்கு மேன்முறையீடு.*

*(3)ஏதேனும் பாலர் பாடசாலையின் உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் உபபிரிவு (2)இன் கீழான நிராகரிப்புக் கட்டளையில் திருப்தி காணாத பட்சத்தில், அத்தகைய உரிமையாளர் அல்லது நிருவாகத்தர் தனது அதிருப்திக்கான காரணத்தைக் காட்டி, சொல்லப்பட்ட நிராகரிப்புக் கட்டளை கிடைக்கப்பெற்ற 14 நாட்களுக்குள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.*

*(4)அவ்வாறான மேன்முறையீடு கிடைத்து கூடியகெதியில் அமைச்சர் அத்தகைய மேன்முறையீட்டை ஆலோசனைக் குழுவுக்குச் சமர்ப்பித்து, ஆலோசனைக் குழுவின் காண்புகள் மற்றும் விதப்புரைகளின் அடிப்படையில் குறித்த மேன்முறையீடு தொடர்பாகத் தீர்மானமொன்றை மேற்கொண்டு அதனை விண்ணப்பதாரிக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.*

*(5)மேன்முறையீடு தொடர்பில் அமைச்சர் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதியானதும், முடிவானதுமாய் இருத்தலும் வேண்டும்.*

*பாலர் பாடசாலை களைப் பதிவு செய்யும் ஏடு ஒன்று பேணப்பட வேண்டும் என்பது.*

*28. (1) இந் நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் அத்தகைய தினத்திலிருந்து பாலர் பாடசாலைகளாக செயற்பட்டு வந்தவையும், இந் நியதிச்சட்டம் நடைமுறைக்கு வந்த தினத்திற்குப்பின் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பதிவு செய்து கொள்ளப்பட்டதும், இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வந்த அத்தகைய தினத்திற்குப் பின்னர், இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கப் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டவையுமான பாலர் பாடசாலைகள் தொடர்பான தகவல்களைப் பதிவு செய்வதற்குரிய ஏடு ஒன்றைத் தகுதி வாய்ந்த அதிகாரி பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.*

*பாலர் பாடசாலைப் பதிவும் பதிவுச் சான்றிதழும்.*

*(2) மாகாணத்தின் எல்லாப் பாலர் பாடசாலைகளும் பணியகத்தினால் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான பதிவு இலக்கமும், பதிவுச் சான்றிதழும் தகுதி வாய்ந்த அதிகாரியால் வழங்கப்படுதலும் வேண்டும்.*

*(3) அத்தகைய சான்றிதழ் இந்நியதிச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கான செல்லுபடியாகும் சட்டரீதியான சான்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

## *பகுதி VII*

### **பாலர் பாடசாலை ஆசிரியர் ஆசிரியைகளின் தகைமைகளும் பயிற்றுவித்தலும்**

*பாலர் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளின் கல்வித் தகைமைகள்.*

*29. (1) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்தில் செயற்பாட்டில் இருக்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக: இலங்கை பரீட்சைத் திணைக்களத் தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் அல்லது சிங்கள மொழியுடன் மற்றும் கணித பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தி ஒன்றைப் பெற்றிருப்பதுடன்,ஆலோசனைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் தாபனம் ஒன்றினால் பாலர் பாடசாலை தொடர்பாக நடாத்தப்பட்ட 3 மாத காலத்திற்குக் குறையாத காலப் பயிற்சி நெறி தொடர்பான சான்றிதழ் ஒன்றையும் பெற்றிருத்தல் வேண்டும்.*

*(2) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் அத்தகைய தினத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட் டிற்கு வரும் அத்தகைய பாலர் பாடசாலைகளின் ஆசிரியர், ஆசிரியைகள் இலங்கை பரீட்சைத் திணைக் களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் அல்லது சிங்கள மொழியுடன் மற்றும் கணித பாடம் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருப்பதுடன், கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தி உட்பட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா தரத்திற்குக் குறையாத ஒரு சான்றிதழையும் பெற்றிருத்தல் வேண்டும்.*

*தகைமையற்றவர்கள் உரிய காலத்தில் தகைமை பெற வேண்டுமென்பது.*

*30. இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் செயற்பாட்டிலுள்ள ஏதேனும் பாலர் பாடசாலை களின் ஆசிரியர், ஆசிரியைகள் பிரிவு 29 உபபிரிவு (1) இல் ஏற்பாடு செய்யப்பட்ட தகைமைகளைப் பெற்றிராதவிடத்து இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் குறித்த தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*31.* பிரிவு 29 உபபிரிவு (1) ல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அடிப்படைக் கல்வித் தகைமை களின்றியும் பிரிவு 30 இல் ஏற்பாடு செய்யப்பட்ட கால எல்லைக்குள் அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பெறமுடியாது போகும் அத்தகைய பாலர் பாடசாலை ஆசிரியர் ஆசிரியை களாகக் கடமையாற்றும் அத்தகைய ஆட்களை அவ்வாறான பதவியில் இருந்து விலக உத்தர விடுவதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அதிகாரம் இருத்ததாதல் வேண்டும். தகைமையில்லா தவர்களை அகற்ற கட்டளைகளையிடும் அதிகாரம்.

*32.* (1) இந்நியதிச்சட்டம் அமுலுக்கு வரும் அத்தகைய தினத்தில் இருந்து 6 மாத காலத்திற்குள் கிழக்கு மாகாணத்திற்குள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பாலர் பாடசாலைகளின் அத்தகைய ஆசிரியர், ஆசிரியைகள் இந்நியதிச்சட்டத்தின் 4 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினூடாக, தம்மை பணியகத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். பாலர் பாடசாலையின் ஆசிரியர் ஆசிரியைகள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது.

(2) உபபிரிவு (1) ற்கு இணங்க விண்ணப்பித்து அத்தகைய விண்ணப்பதாரர்கள் இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய தகைமை பெற்றிருந்தால் அவர்களைத் தகுதி வாய்ந்த அதிகாரி அதற்கெனப் பேணப்படும் புத்தகத்தில் அத்தகைய தகவல்களைப் பதிவு செய்து கொள் வதுடன் அவர்களுக்கான பதிவு இலக்கமொன்றையும் வழங்குதல் வேண்டும்.

*33.* தகுதி வாய்ந்த அதிகாரியானவர் பாலர் பாடசாலையை முகாமை செய்யும் நிருவாகத்தர்கள், ஆசிரியர் ஆசிரியைகளுக்குத் தேவையான மேலதிக கல்வி அறிவு, ஆற்றல் என்பன தொடர்பாகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும், பயிற்சிப் பாடத்திட்டம் ஒன்றையும் வருடாவருடம், குறித்த வருடத்தின் முந்திய வருட மூன்றாம் காலாண்டுக்கு முன்னர் தயாரித்து ஆலோசனைக்குழு முன்பாக அனுமதி கோரிச் சமர்ப்பித்தல் வேண்டும். நிருவாகத்தர், ஆசிரியர், ஆசிரியை பயிற்சி.

*34.* ஆலோசனைக் குழுவின் அனுமதியின் பேரில் தகுதி வாய்ந்த அதிகாரியின் வழிகாட்டலின் அடிப்படையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகளில் பங்குபற்றுதல் ஒவ்வொரு பாலர் பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர், ஆசிரியைகளின் கட்டாய கடமையாதல் வேண்டுமென்பதுடன், ஆலோசனைக் குழுவினால் சிபாரிசு செய்யப்படும் அத்தகைய தேவைப்பாடுகள் அடங்கிய பயிற்சி நெறிகளில் பங்குகொள்ளாத நிருவாகத்தர், ஆசிரியர், ஆசிரியைகளுக் கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் தகுதி வாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கை.

*35.* பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களை அறிவுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக ஆலோசனைக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் முறைசார் வேலைத் திட்டமொன்றைத் தகுதி வாய்ந்த அதிகாரி தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். பெற்றோருக்கு விழிப்புணர்வு.

## பகுதி VIII

### பொது ஏற்பாடுகள்

*36.* (1) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்படும் அத்தகைய கருமங்கள் தொடர்பில் அமைச்சர் கட்டளைகள் ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை ஆக்கி, வர்த்தமானியில் பகிரங்கப்படுத்த முடியுமாதல் வேண்டும். ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் கட்டளைகளை வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தல்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் சகலவிதமான விதிகளும் ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அத்தகைய தினத்தில் இருந்து அல்லது வலுவுக்கு வருவதாக குறிக்கப்படும் அத்தகைய திகதியில் இருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்: விதிகளும் ஒழுங்கவிதிகளும் வலுவிற்கு வருதல்.

எது எவ்வாறிருப்பினும், அத்தகைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டு, மூன்று மாதகாலப் பகுதிக்குள் அனுமதிக்காக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அக் காலகட்டத்தில் மாகாண சபையானது இடைநிறுத்தப்பட்டோ கலைக்கப்பட்டோ இருப்பின் அத்தகைய இடைநிறுத்தத்திற்கு அல்லது கலைப்பிற்கு அடுத்து வரும் மாகாண சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண சபை அத்தகைய விதி, ஒழுங்குவிதி அல்லது கட்டளைக்கு அனுமதியளிக்காத அத்தகைய சந்தர்ப்பத்தில் அது அனுமதி மறுக்கப்பட்ட அத்தகைய தினத்திற்கு முன்னர்குறித்த விதி, ஒழுங்குவிதி அல்லது கட்டளையின் கீழ் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயலிழப்புச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) யாதாயினுமொரு விதி, ஒழுங்குவிதி அல்லது கட்டளை செயலிழப்புச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் அத்தகைய தினத்தில் அது தொடர்பான அறிவித்தலை வர்த்தமானி மூலம் வெளியிடப்படுதல் வேண்டும்.

*37.* இந் நியதிச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளும் நோக்கத்துடன் எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் விசேட சேவையைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பணியகத்தினால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அதற்கான கொடுப்பனவுகளை வழங்க முடியுமாதலும் வேண்டும். விசேட சேவைகளுக்கு ஆட்களை அமர்த்துதலும் கொடுப்பனவுகளும்

அமைச்சரதும், ஆலோசனைக் குழுவினதும் பணிப்பினை தகுதி வாய்ந்த அதிகாரி ஏற்று செயற்படுதல்.

*38 அமைச்சரினாலோ அல்லது ஆலோசனைக் குழுவினாலோ தகுதி வாய்ந்த அதிகாரிக்கு இந்நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கமைய யாதாயினும் கட்டளை, அல்லது ஆலோசனை அல்லது வழிகாட்டல் வழங்கப்பட்டால் அதற்கமைய அவர் செயற்படுவதற்கும் ஏதேனும் அறிக்கை அல்லது ஆவணம் அமைச்சரால் அல்லது ஆலோசனைக்குழுவால் கோரப்பட்டால் அதைப் பெற்றுக் கொடுக்க தகுதி வாய்ந்த அதிகாரி கடமைப்பட்டவராதலும் வேண்டும்.*

## பகுதி IX

## தவறுகளும் தண்டனைகளும்

தவறுகளும் தண்டனைகளும்.

*39. இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுள் ஒன்றையோ பலவற்றையோ அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மற்றும் கட்டளைகளை மீறுவது அல்லது இந்நியதிச்சட்டத்தினால் விதிக்கப்படும் கடமைகளை அல்லது பொறுப்புக்களை ஏற்று ஒழுகத் தவறுவது, அல்லது இந்நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவருக்குத் தனது கடமைகளைச் செய்வதில் இடையூறுகளை ஏற்படுத்துவது இந்நியதிச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றமாதல் வேண்டும்.*

*40. அவ்வாறான குற்றத்தினைப் புரியும் எவரேனும் ஆள் நீதவான் நீதிமன்றத்து நீதவான் முன்னிலையில் சுருக்க முறை விசாரணை ஒன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டால் அந்த ஆளுக்கு இலங்கை நாணயப்படி ரூபாய் ஆயிரம் அபராதமாகவோ அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது இவ்விரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படலாம்.*

ஒவ்வாமை ஏற்படுமிடத்து, தமிழ் உரையே மேலோங்கியதாகக் கொள்ளப்படல்.

*41. இந்நியதிச்சட்டத்தின் தமிழ் அல்லது சிங்கள உரைகளிடையே ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால் அவற்றுள் தமிழ் உரையே மேலோங்கியதாகக் கருதப்படும்.*

பொருள் கொள்ளல்.

*42. இந்நியதிச்சட்டம் வேறு வகையாக ஏற்பாடுசெய்தாலன்றி: "அமைச்சர்" எனப்படுபவர், கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலைக் கல்விக்குப் பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்."அமைச்சர் வாரியம்" என்பது கிழக்கு மாகாண அமைச்சர்கள் வாரியத்தைக் குறிக்கும்."தகுதி வாய்ந்த அதிகாரி" எனப்படுபவர் இந்நியதிச்சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் நியமிக்கப்படும் அதிகாரியாவார்."நிர்வாகத்தர்கள்" என்பது பாலர் பாடசாலையை நடாத்தும் அல்லது முகாமை செய்பவர்களைக் குறிக்கும்"பாலர் பாடசாலை" என்பது மாகாணத்தினுள் பிள்ளைப்பருவத்தில் கல்வி மற்றும் விசேட கல்வி வழங்கும் நோக்கில் அமைத்துச் செயற்படுத்தப்படும் கல்விக்கூடத்தைக் குறிக்கும்."பிள்ளைப்பருவம்" என்பது ஆண், பெண் இருபாலாரினதும் 3 வயது தொடங்கி 5 வயது வரையான காலப்பகுதியாகும். "மாகாணம்" என்பது மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் மூன்றையும் உள்ளடக்கிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மாகாண நிலப்பரப்பைக் குறிக்கும்."மாகாண சபை" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIA இற்கு அமைய தாபிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையைக் குறிக்கும்."மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்" எனப்படுபவர் கிழக்கு மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரைக் குறிக்கும்."விசேடமான பிள்ளைகள்" எனக் கருதப்படுவது பிள்ளைப்பருவத்தில் உடல், உள நலக் குறைவுள்ள பிள்ளைகளைக் குறிக்கும்."விசேட கல்வி" என்பது விசேடமான பிள்ளைகள் தொடர்பில் வழங்கப்படும் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளைக் குறிக்கும்."பணியகம்"என்பது, இந்நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகள் கல்விப் பணியகத்தைக் குறிக்கும்.*

*முதலாவது அட்டவணை*

பிரிவு 22 இற்கமைய

**பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்**
***அலுவலகப் பாவனைக்கு***

1. விண்ணப்ப இல:----
2. கிடைத்த திகதி :----
3. பொறுப்பேற்ற அலுவலரின் கையொப்பம் :----
4. செலுத்தப்பட்ட பதிவுக்கட்டணத் தொகை :----
5. பெறுவனவுப் பற்றுச்சீட்டு இல :----
6. பதிவு ஏற்கப்பட்டுள்ளது /ஏற்கப்படவில்லை :----
7. ஏற்கப்படவில்லையாயின் காரணம் சுருக்கமாக :----
8. ஏற்கப்படின் பதிவிலக்கம் :----

…………………………………………
தகுதி வாய்ந்த அதிகாரியின் கையொப்பம்

**செயற்பாட்டிலுள்ள பாலர் பாடசாலைகளைப் பதிவு செய்தற்கான விண்ணப்பப்படிவம்**

1. பாலர் பாடசாலை நிறுவப்பட்டு செயற்படும் இடத்தின் பெயரும் முகவரியும் :----
2. கிராம உத்தியோகத்தர் பிரிவும், இலக்கமும் :----
3. பிரதேச செயலாளர் பிரிவு :----
4. மாவட்டம் :----
5. உள்ளூராட்சி மன்றப் பிரிவுப் பெயர் :----
6. வலயக்கல்வி அலுவலகப்பிரிவு:----
7. ஆரம்பிக்கப்பட்ட திகதி :----
8. பாலர் பாடசாலையின் பெயர் :----
9. பாலர் பாடசாலையின் கற்பித்தல் மொழி :----
10. பாலர் பாடசாலையின் தற்போது நடைமுறையிலுள்ள பாடத்திட்ட விபரம் :-----
(பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
11. பாலர் பாடசாலையின:----
(அ) உரிமையாளரின் பெயா:----
(ஆ) நிருவாகத்தர் பெயர் /பெயர்கள:----
12. இதற்கு முன்னர் ஏதேனும் நிறுவனத்தில் பாலர் பாடசாலை பதியப்பட்டதா? அவ்வாறாயின் அது பற்றிய விபரம் :----
13. பாலர் பாடசாலையின் தாபகத்துக்குக் காரணமாக அமைந்த ஆள்/ஆட்கள் அல்லது நிறுவனத்தின் பெயர் :----
14. பாலர் பாடசாலைக்கு நிதியீட்டும் /பொருளீட்டும் நபர்/நிறுவனத்தின் விபரம் :----
15. பாலர் பாடசாலை அமைந்துள்ள காணி /கட்டட உரிமையாளர் விபரம் :----
16. பாலர் பாடசாலை அமைந்துள்ள கட்டடத்தின் அறைகள் அல்லது மண்டப விபரமும் விஸ்தீரணமும்
(தள வரைபடம் இணைக்கப்படல் வேண்டும்) :----
17. காணி, கட்டடம் யாரால் பராமரிக்கப்படுகின்றது என்பது பற்றிய விபரம் :----
18. தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை :----
ஆண்:-
பெண்:-

19. ஆசிரியர் விபரம்:-

| ஆசிரியர் பெயர் | முகவரி | ஆண்/பெண் | கல்வித்தகைமை |
|---|---|---|---|
| | | | |

20. பாலர் பாடசாலை நிர்வாகம் /முகாமை பற்றிய முழுவிபரம் :----
   (i) குடிநீர்
   (ii) மின்சாரம்
   (iii) கழிவறை
   (iv) மைதானம் /முற்றம்

21. பாலர் பாடசாலைக்கான அடிப்படை வசதிகள் பற்றிய விபரம் :----

   (V) ஏனையவை

22. பாலர் பாடசாலைக்கு கிடைத்துள்ள /கிடைக்கப்பெறவுள்ள கற்றல் ,கற்பித்தல் உபகரணங்கள் பற்றிய விபரம்:-

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவை என இத்தால் உறுதியுரைகின்றேன்.

திகதி:............................ ............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பெயர் :...............................................................
பதவி /தகுதி:----.

பிரிவு 23 இற்கமைய

## இரண்டாவது அட்டவணை

### தாமதக் கட்டணம்

(1) முதல் மூன்று மாத காலத் தாமதத்துக்கு, மாதமொன்றுக்கு தலா ரூபா 500.00

(2) தாமதக் காலம் முதல் மூன்று மாதங்களுக்கு அடுத்து வருகின்ற 5 மாதங்களுக்கு மாதமொன்றுக்கு தலா ரூபா 1000.00

(3) தாமதக்காலம் முதல் மூன்று மாதங்களையும் விஞ்சி அடுத்து வருகின்ற தாமதக்காலங்களையும் உள்ளடக்கியதாக அமையுமாயின் தாமதக்கட்டணம் மேலே குறிப்பிடப்பட்ட (1) மற்றும் (2) களில் காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் இரண்டையும் சேர்த்ததாக அமையும்.

பிரிவு 24 இற்கமைய

## மூன்றாவது அட்டவணை

**இந்நியதிச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட திகதியினையடுத்து தாபிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கானது.**

### பாலர் பாடசாலைக் கல்விப் பணியகம்

**அலுவலகப் பாவனைக்கு:**

1. விண்ணப்ப இல. :----
2. கிடைத்த திகதி :----
3. பொறுப்பேற்ற அலுவலரின் கையொப்பம் :----
4. செலுத்தப்பட்ட பதிவுக்கட்டணத் தொகை :----
5. பெறுவனவுப் பற்றுச்சீட்டு இல :----
6. பதிவு ஏற்கப்பட்டுள்ளது /ஏற்கப்படவில்லை :----
7. ஏற்கப்படவில்லையாயின் காரணம் சுருக்கமாக :----
8. ஏற்கப்படின் பதிவிலக்கம் :----

.......................................
தகுதி வாய்ந்த அதிகாரியின் கையொப்பம்

**புதிதாக தாபிக்கப்படும் பாலர் பாடசாலைகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. பாலர் பாடசாலை நிறுவ அல்லது தாபிக்க உத்தேசித்துள்ள இடத்தின் பெயரும் முகவரியும் :----
2. கிராம உத்தியோகத்தர் பிரிவும் , இலக்கமும் :----
3. பிரதேச செயலாளர் பிரிவு:----
4. மாவட்டம் :----
5. உள்ளூராட்சி மன்றப் பிரிவு, பெயர் :----
6. வலயக்கல்வி அலுவலகப்பிரிவு :----
7. பாலர் பாடசாலைக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பெயர் :----
8. பாலர் பாடசாலையின் கற்பித்தல் மொழி /மொழிகள் :----
9. பாலர் பாடசாலையின் :----
   (அ) உரிமையாளரின் பெயர் :----
   (ஆ) நிருவாகத்தர் பெயர் /பெயர்கள்:----
10. பாலர் பாடசாலை தாபிக்கக் காரணமாக அமைந்த ஆள் அல்லது ஆட்கள் அல்லது நிறுவனத்தின் விபரம் : ----
11. பாலர் பாடசாலைக்கு நிதியீட்ட அல்லது பொருளீட்ட உத்தேசித்துள்ள ஆள் அல்லது நிறுவனத்தின் விபரம் :----
12. ஏலவே அமைந்துள்ள கட்டடமாயின் உத்தேச பாலர் பாடசாலை தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள :----
   (அ) காணி /கட்டிட உரிமையாளர் விபரம்:----.
   (ஆ) கட்டடத்தின் அறைகள்/மண்டப விபரம்:----.
   (தள வரைபடம் இணைக்கப்படல் வேண்டும்)
13. புதிதாகக் கட்டிடம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாயின்,
   (அ) காணி உரிமையாளரின் விபரம்:----.
   (ஆ) கட்டட நிதி வழங்குநர் விபரம்:----.
   (இ) நிறுவப்படும் கட்டட பராமரிப்பு விபரம்:----.
14. பதிவு செய்யப்படவுள்ள மாணவ /மாணவியர் உத்தேச எண்ணிக்கை:----.
   ஆண்:----
   பெண:----
15. உத்தேச ஆசிரியர் விபரம்:-

| ஆசிரியர் | பெயர் | முகவரி | ஆண்/பெண் | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|
| | | | | |

16. உத்தேச பாலர் பாடசாலை யாரால் நிருவகிக்கப்பட அல்லது முகாமை செய்யப்படவுள்ளது என்பது பற்றிய விபரம்:----
17. பாலர்பாடசாலைக்கு உரித்தாக்கப்படவுள்ள அடிப்படை வசதிகள் பற்றிய விபரம் :----
   (i) குடிநீர்
   (ii) மின்சாரம்
   (iii) கழிவறை
   (iv) மைதானம் /முற்றம்
   (v) ஏனையவை
18. பாலர் பாடசாலைக்குக் கிடைத்துள்ள /கிடைக்கப்பெறவுள்ள கற்றல், கற்பித்தல் உபகரண விபரங்கள்:-

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவை என இத்தால் உறுதிமொழிகிறேன்.

....................................

திகதி

.........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பெயர் :----

பதவி /தகுதி:----

*32 பிரிவு இற்கமைய*

**நான்காம் அட்டவணை**

**பாலர் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளைப் பதிவுசெய்தல்**

1. ஆசிரியரின் பெயர் :----
   (முதலெழுத்துக்களுடன்)
2. முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :----
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----
4. முகவரி :----
5. முகவரி அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் :----
6. திருமணமானவர் /திருமணமாகாதவர்:----
7. பால்:- ஆண்/பெண்:----
8. பிறந்த திகதி :----
9. விண்ணப்ப திகதியன்று வயது:---- வருடம்:---- மாதம்:----
10. தேசிய இனம்:----
11. சமயம்:----
12. கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் பாலர் பாடசாலையின் பெயர், முகவரி :----
13. அது அமைந்துள்ள:-
    (அ) கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்:----
    (ஆ) பிரதேச செயலாளர் பிரிவு:----
    (இ) மாவட்டம்:----
    (ஈ) உள்ளூராட்சி மன்றப்பெயர்:----
14. பாலர் பாடசாலையின் உரிமையாளர் /நிர்வாகத்தர் பெயர்:----
15. தாங்கள் கற்பிக்கும் மொழிமூலம்:----
16. தங்களுடன் இணைந்து பணியாற்றும் எவரேனும் ஆசிரியர்கள் இருப்பின், அவர்களது விபரம்:----

***பெயர்*** ***முகவரி***

17. மேற்படி பாடசாலையில் தாங்கள் ஆசிரியராக இணைந்து கொண்ட திகதி :----
18. தங்களது பாலர் பாடசாலை ஆசிரிய சேவை விபரம் :----

| தொ.இல | பாடசாலையின் பெயர் | முகவரி | தொடங்கி .... வரை .... |
|---|---|---|---|
| | | | |

19. விண்ணப்பத் திகதியன்று தங்களின் மொத்த சேவைக்காலம் :----
20. கல்வித்தகைமை விபரம் :----
21. தொழிற்தகைமை விபரம்:----

பங்குபற்றிய, சான்றிதழ் பெறப்பட்டதுமான பயிற்சி நெறிகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் பற்றிய விபரம்:----

| பயிற்சி | விடயப்பொருள் | காலம் | யாரால் |
|---|---|---|---|
| ப/பட்டறை<br>கருத்தரங்கு | | | |

*1. விண்ணப்பத் திகதியில் தங்களது சம்பள மற்றும் படிகள் விபரம் :----*

*2. தங்களது சம்பளம் வழங்கப்படும் வருவாய் மூலம் :----*

*மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியானது, நேர்த்தியானது, உண்மையானது என இத்தால் வெளிப்படுத்தி உறுதி செய்கின்றேன்.*

..................................
*திகதி*

..................................................................
*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

*மேற்படி திரு. /திருமதி /செல்வி...................................................... என்னும் ஆசிரியரால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எமது பாடசாலை ஆவணங்கள், ஏடுகள் மற்றும் கோவைகளின் பிரகாரம் சரியானது என இத்தால் உறுதிப்படுத்தி சிபார்சு செய்கின்றேன்.*

........................................
*திகதி*

..................................................................
*உரிமையாளர் /நிர்வாக உத்தியோகத்தர் கையொப்பம்.*

*பெயர் :----.*
*பதவி /தகுதி :----.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*